**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(25.04.2018 முதல் 29.04.2018)**
**அறிக்கைஎண் 32/2018**
**தேதி:24.04.2018**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 21°செ முதல் 26°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (25.04.2018 முதல் 29.04.2018)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த மூன்று நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 38°செ முதல் 39°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 50 முதல் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 25.04.18 | 1 | 38 | 25 | 4 | 75 | 50 | 10 | தெற்கு |
| 26.04.18 | 5 | 38 | 25 | 4 | 75 | 50 | 10 | தெற்கு |
| 27.04.18 | 1 | 39 | 25 | 4 | 75 | 60 | 10 | தென்மேற்கு |
| 28.04.18 | 0 | 39 | 25 | 4 | 75 | 60 | 10 | தென்மேற்கு |
| 29.04.18 | 0 | 39 | 25 | 4 | 75 | 60 | 10 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ இலேசான மழையை எதிர்பார்க்கப்படுவதால் மண்ணிண் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும். குறிப்பாக தென்னை, வாழை போன்றபயிர்களுக்கு நீர் பாய்ச்சவும்.
- ✓ காற்றின் வெப்ப ஈரப்பத குறியீடு அதிகமாக உள்ளதால் கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சி மற்றும் வெப்ப அயற்சியினை தவிர்க்க போதிய குடிநீர் வழங்கவும். உடலில் நீர் தெளிப்பு செய்யவும்.
- ✓ நடப்பு வானிலையில் கரும்பில் இளம்குருத்துப்புழு வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் அடிக்கடி நீர் பாய்ச்சிவயலை ஈரமாக வைத்துக் கொள்வதுடன் பயிர் மூடாக்கும் செய்யலாம்.

**குறுஞ்செய்தி**

- ✓ அதிக வெப்ப ஈரப்பத குறியீட்டினால் கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சி, வெப்ப அயற்சியினை தவிர்க்க போதிய குடிநீர் வழங்கவும். உடலில் நீர் தெளிப்பு செய்யவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**